முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**EA No.145/2023 in EP.84/2009 in OS.182/1992**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 18.06.2025 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 18.06.2025 | சாட்சி | ம.சா.1 |
| பெயர் | சம்பத் | வயது.. | 47 |
| தந்தை பெயர்.. | ராமலிங்கம் | கிராமம்.. | பி.முட்லூர் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ...**

6. ம.சா.ஆ.4-யின் அசல் என் வீட்டில் உள்ளது. ஏன் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் அசலை நீதிமன்றதில் கொடுத்தால் தேவை ஏற்படும் போது பெறுவதற்கு சிரமம் என்பதால் சான்றிட்ட நகலை தாக்கல் செய்தேன் வேறு காரணங்கள் இல்லை. எவ்வளவு ரூபாய்க்கு பத்திரம் வாங்கிறேன் என்பது ஞாபகம் இல்லை. பத்திரத்தின் வாசககங்களை யார் கூறினார் என்றால் எனக்கு தெரியாது. சொத்து சம்மந்தமான மூல பத்திரங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். ம.சா.ஆ.4 இல் மூல பத்திரங்களை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. பத்திரத்தில் வழக்கு சொத்து எங்களுக்கு பூர்வீக பாத்தியமானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.5 ஜோதிலிங்கம் பத்திரத்தில் எங்களுக்கு பூர்வீக பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. ம.சா.ஆ.4,5 ஒரே தேதியில் எழுதப்பட்டது என்றால சரிதான். ஜோதிலிங்கம் நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்றால் அவர் வரவில்லை அவருக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன். ஜோதிலிங்கம் எவ்வளவு ரூபாய்க்க கிரயம் வாங்கினார் என்றால் ஞாபகம் இல்லை. ம.சா.ஆ.4,5 பத்திரத்தில் சாட்சிகள் உள்ளார்களா என்றால் இருக்கிறார்கள். கிரயம் கொடுத்தவர்களின் அத்தை தான் தேவகி, ஞானசௌந்தரி, சுசிலாவும் என்றால் சரிதான். ஞானசௌந்தரியும், சுசிலாவும் நீதிமன்றத்தில் ஒப்புதல் பெற்ற கிரயம் கொடுத்தார்களா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. பூர்வீக சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் தேவகி, ஞானசௌந்தரி, சுசிலா எவ்வாறு பாத்தியம் என்று விசாரித்தேனா என்றால்

ஜீவரத்தினத்தின் தந்தை எழுதிவைத்த உயிலின் அடிப்படையில் ம.சா.ஆ.4,5 -இல் பெறப்பட்டது, ம.சா.ஆ.4,5 இல் உயிலை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடவில்லை.

8. மனு சொத்துக்கள் அனைத்தும் தேவகிக்கு இறுதிநிலை தீர்ப்பாணையில் வழக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் இருந்து இறுதிநிலை தீர்ப்பாணை வாங்கி பார்த்தேனா என்றால் தெரியவில்லை, வழக்கறிஞர் பார்த்தாரா என்று எனக்கு தெரியாது. கிரயம் வாங்கிய பிறகு தொடரச்சியாக வீட்டு வரி செலுத்தி வருகிறேன். நான் கிரயம் வாங்கியபோது இடம் காலியாக இருந்ததா என்றால் ஜீவரத்தினத்தின் ஓட்டு வீடு இருந்தது. ஜீவரத்தினம் வீட்டு வரி கட்டினாரா என்றால் எனக்கு தெரியாது. நான் வீடு கட்டுவதற்கு பஞ்சாயத்தில் அனுமதி பெறவில்லை. வழக்குகள் நிலுலையில் இருப்பது தெரிந்து தான் வீடு கட்டினேன் என்றால் சரியல்ல, நான் கிரயம் வாங்கியதால் வீடு கட்டினேன். கிரயம் கொடுத்தவர்களிடம் வழக்குகள் நிலுலையில் இருப்பது பற்றி விசாரித்தேனா என்றால் நீதிமன்றத்தில் இருந்து அமீனா வந்து இடத்தை காலி செய்து கொடுக்கும் படி கூறியபிறகு தான் எனக்கு வழக்குகள் பற்றி தெரியும்.

9. கிரயம் கொடுத்தவருக்கு ஏமாற்றி கிரயம் கொடுத்தற்கு நோட்டீஸ் கொடுத்தேனா என்றால் இல்லை. நானும், ஜோதிலிங்கமும் ஒரு பைசா கொடுத்து கிரயம் பெறவில்லை என்றாலும், கிரய பத்திரத்தை தயார் செய்து வழக்கு நடத்தி வருகிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. இறுதிநிலை தீர்ப்பாணை அடிப்படையில் ஞானசௌந்தரி, சுசிலாவும் அவர்களுக்கு பாகமாக கிடைத்த சொத்தை விற்று விட்டார்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது. மனு போடுவதற்கு முகாந்திரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பி.முட்லூரில் வசிப்பதால் ஈன கிரயம் பெற்று வழக்காடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல நான் பணம் கொடுத்து தான் கிரயம் பெற்றேன்.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

*Sd/-S.Padmavathi,*
Principal District Munsif
Chidambaram.